மூடி விட்டார்கள் என்று. நாங்கள் நல்ல நோக்கத்தோடு தான் அதைச் செய்திருக்கிறோம். அந்தப் பணியாளர்களை அழைத்துப் பேசி முதலிலே அவர்களுக்கு இந்தப் பிரச்சினையை புரிய வைத்து, அதற்குப் பின்னாலேதான் அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்பதை மட்டும் நான் கூறிக்கொள்கிறேன்.

(ஆ) லால்குடி தொகுதி உப்பாற்றில் மணல் சேர்ந்துள்ளதால் தண்ணீர் தேங்கி விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி ஜெ. லோகாம்பாள் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ஜெ. லோகாம்பாள்.

திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி தொகுதி உப்பாற்றில் மணல் சேர்ந்துள்ளதால் தண்ணீர் தேங்கி விவசாயப் பயிர்கள் நாசமாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

லால்குடி தொகுதி கிராமத்தில் உப்பாற்றில் நடப்பு நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தூர் எடுக்கும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரின் விவர அறிக்கையினைப் படித்தேன். உப்பாற்றிலிருந்து மணலை எடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்திருக்கிறார். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உப்பாறு திட்டமானது பெரம்பலூரில்

1995 நவம்பர் 10] [திரு. ஜெ. லோகாம்பாள்]

ஆரம்பித்து எனது தொகுதியான இரத்தினங்குடி, புரத்தான்குடி, மகிளம்பாடி வழியாக நந்தியாறு வரையிலும் செல்கின்றது. இதில் சுமார் 50000 ஏக்கர் வடிகால் வசதி உள்ளது. 25000 ஏக்கர் பாசன வசதியுள்ளது. ஆகையால் உப்பாற்றை புல்டோசர் மூலமாக சீர்செய்து மணலை அப்புறப்படுத்தினால் கரும்பு, வாழை போன்ற பணப் பயிர்களும், நெல் போன்ற அத்தியாவசிய பயிர்களும் சேதமாகாமல், மக்களுக்கு மிக்க பயன் தரும். எனவே இத்திட்டத்தை அதிரடி நடவடிக்கை மூலம் செயல்படுத்த வேண்டுகிறேன். இந்த நடவடிக்கையை நீங்கள் எடுத்தால் அது இப்பகுதி விவசாய மக்களுக்கு மிகுந்த பயனைத் தரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, இந்த உப்பாறு என்பது மழைக் காலத்தில் மட்டும் தான் தண்ணீர் வருகிற காட்டாறு—ஜங்கிள் ஸ்ட்ரீம். லால்குடி தாலுகா சிறுபத்தூர் என்ற இடத்தில் உப்பாற்றில் 3.3 மீட்டர் உயரத்தில் அணை கட்டப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 1200 ஏக்கருக்கு பாசன வசதி செய்யப்பட்டு வருகிறது. மழைக் காலத்தில் மட்டும்தான் அணையில் தண்ணீர் இருக்கும். ஆண்டுதோறும் 90000 ரூபாய் வரை அணை மராமத்துக்காக செலவழிக்கப்படுகிறது. 5 இலட்ச ரூபாய் கால்வாயை சீரமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கால்வாய் சீரமைக்கப்படுகின்றபோது, எந்தெந்தப் பகுதிகளில் மணல் தேங்கியிருக்கிறது என்று ஆய்வு செய்து நான் அறிக்கையில் தெரிவித்திருப்பதைப் போல, முன்னுரிமைக் கொடுத்து, அதற்கான நடவடிக்கை நிதி நிலைமைக்கேற்ப செய்யலாம் என்று அரசு கருதுகிறது.

(இ) திருவொற்றியூர் தொகுதியில் கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. க. குப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. க. குப்பன்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருவொற்றியூர் தொகுதியில் கடல் அரிப்பை நிரந்தரமாகத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது குறித்த” அவசரப்

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

1992-93 மற்றும் 1993-94ஆம் ஆண்டுகளில் வடசென்னை பகுதியில் (திருவொற்றியூர் உட்பட) எண்ணூர் நெடுஞ்சாலையில் கடல் அரிப்பு அதிகமாக உள்ள பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு சுமார் 1.72 கி.மீ. தூரம் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் செய்யத் தேவையான திட்டம் அரசினால் ரூ.4.93 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டன. ஓரிரண்டு வேலைகள் தவிர அனைத்துப் பணிகளும் சுமார் 80 முதல் 90 சதவீதம் முடிவடைந்துள்ளன. எல்லா வேலைகளையும் விரைவில் முடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 1994-95ம் ஆண்டில் ரூ.70 இலட்சத்திற்கு எண்ணூர் பகுதியில் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தற்போது திருவொற்றியூர் பகுதியில், உடனடியாக எடுத்துக்கொள்ளப்படவேண்டிய பகுதிகளாகிய கி.மீ.13/100--13/200 மற்றும் 13/200--13/300 கி.மீ. வரை கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டுவது சம்பந்தமாக 1995-96ஆம் ஆண்டு புதிய பணித் தொகுப்புத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.30.50 இலட்சத்திற்கு அரசு ஆணை எண்.893, பொதுப்பணித்துறை, நாள் 1-11-95ல் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடல் அரிப்பிற்கு நிரந்தரத் தீர்வு காண புனே மத்திய ஆராய்ச்சிக் குழு அறிக்கை கோரப்பட்டது. அந்நிலைய நிபுணர்கள் மாதிரி ஆய்வு (Model study) நடத்த முடிவெடுக்க, நிதி ஒதுக்கீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்கு அரசின் நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்ற பின்னர் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும். ஆய்வின் முடிவில் நிரந்தரத் தீர்வு பற்றி முடிவெடுக்க இயலும். திருவொற்றியூர் தொகுதியில் கடல் அரிப்பை நிரந்தரமாக தடுக்க நிதிநிலைமைக்கேற்ப பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1995 நவம்பர் 10]

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் கடந்த 3, 4 ஆண்டுகளுக்கு 4 கோடியே 93 இலட்சம் ரூபாயும் இந்த ஆண்டு 70 இலட்சம் ரூபாயும், அதற்குப் பிறகு ஒரு 30 இலட்சம் ரூபாயும் ஒதுக்கி மொத்தம் 5 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவழித்து கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடையத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், இந்த நடவடிக்கைகள் தற்காலிக நடவடிக்கைகளே தவிர நிரந்தரமான நடவடிக்கைகள் அல்ல என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு புறம் கடலரிப்பு ஏற்படுகிறபோது, கற்களைக் கொட்டுகிற போது மறுபுறம் இன்னொரு கிராமத்தைக் கடல் அரித்துக் கொண்டிருக்கிறது. இப்போதுகூட வடக்கு பாரதியார் நகர்ப் பகுதியிலே 50 வீடுகளைக் கடல் அடித்துச் சென்றுவிட்டது. பெரியகாசிக்குப்பம் பகுதியில் 50 வீடுகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. திருவொற்றியூர் குப்பம், அப்பர் நகர்ப் பகுதியில் குறிப்பாக 100 வீடுகள் கடலில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. அது மட்டுமல்ல, எண்ணூர் விரைவுப் பேருந்துச் சாலை துண்டிக்கப்பட்டிருக்கிறது. நான் இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால்.......

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எல்லாம் அமைச்சருக்கே தெரியும்.

திரு. க. குப்பன்: இதனை மாண்புமிகு அமைச்சர் கூட பலமுறை அந்தப் பகுதிக்கு வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். இந்தப் பகுதியினுடைய எண்ணூர் விரைவுப் பேருந்துச் சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை வழியாக அனைத்துப் பேருந்துகளும், அனைத்து வாகனங்களும் செல்வதால், குறிப்பாக தொழிலாளர்களும், மாணவ மாணவியரும், வியாபாரிகளும், பொதுமக்களும் அந்தச் சாலையில் செல்வதற்கு முடியாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

ஆகவே கடல் அரிப்பை நிரந்தரமாகத் தவிர்ப்பதன் மூலம்தான் திருவொற்றியூர், எண்ணூர் பகுதி மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொடுக்கமுடியுமே தவிர வேறல்ல என்பதை எடுத்துக்கூறி இந்த நிகழ்வை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது மட்டுமல்ல, இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் போல, புனேயிலிருந்து மத்திய ஆய்வு நிபுணர்கள் குழு ஒரு மாடல் ஸ்டடியை எடுக்கவேண்டுமென்று கடந்த எட்டு மாத காலத்திற்கு முன்பு வந்து பார்வையிட்டு, அந்த மாடல் ஸ்டடிக்காக பத்து லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு அவர்களுக்குக் கொடுத்தால், அவர்களுடைய மாடல் ஸ்டடியை நம் அரசாங்கத்திற்குக் கொடுப்பார்கள் என்றும், அப்படிக் கொடுத்ததற்குப் பின்னால்தான் இதில் மறு ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிதியை மாண்புமிகு அமைச்சர் உடனடியாகப் பெற்றுத் தந்து அந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும் வகையில், நடவடிக்கை எடுக்கவேண்டும். திருவொற்றியூர் பகுதியில் 200 அடி 300 அடி என்று கடலரிப்பால் அடித்துச் செல்லப்படுகிற நிலையில், நிரந்தரமாக அதைத் தடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, எப்போது அந்தப் பணிகளை துவக்க இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவர அறிக்கையில் இருக்கிற அத்தனையையும் அவரே படித்துவிட்டார்கள். ஆகவே என்னுடைய பதில் மிகச் சுருக்கமாக இருக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். கடலரிப்பு என்பது நிரந்தரமான, தீர்க்கமுடியாத பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, ஏறத்தாழ 1.72 கிலோ மீட்டர் தூரத்திற்கு கிட்டத்தட்ட 5 கோடி ரூபாயை முதலில் ஒதுக்கி அதில் 90 சதவீதப் பணிகள் இன்றைக்கு முடிந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியை விட்டு மறு பகுதிகளில் அலை அடிக்கின்றபோது, காற்று அதிகமாக அடிக்கிறபோது, பருவ மழைக்காலங்களில்—குறிப்பாக வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் அந்தப் பகுதி பாதிக்கப்படுகிறது. அதற்கும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டு, சென்ற ஆண்டு அதற்காக 70 லட்சம் ரூபாயை ஒதுக்கி, 1994-95ல் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டு அந்த

1995 நவம்பர் 10] [திரு. எஸ். கண்ணப்பன்]

வேலையும் நடைபெறுகிறது. அது தவிர, இந்த ஆண்டு சிறப்பு நிதியாக *30* லட்சம் ரூபாயை ஒதுக்கி, மறுபடியும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்கான அதற்குரிய டெக்னிகல் அட்வைசைப் பெற்று பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிரந்தரமான பிரச்சினைகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு செய்து, புனேயிலிருந்து மாடல் ஸ்டடிக்காக அதிகாரிகளை அழைத்து அவர்களோடு கலந்து பேசி மிகப் பெரியத் திட்டமாக பலகோடி ரூபாய் செலவில் நிறைவேற்றினால்தான் அதை நிரந்தரமாகத் தீர்க்க முடியும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவேதான், அதிலே அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிய சூழ்நிலைக்கு மாநில அரசுக்கு ஒரு நிர்ப்பந்தம் இருக்கிற காரணத்தால்தான் அதை ஆய்வு செய்து முறையாக நிதியை வேறு வழிகளில் பெறலாமா, அதாவது வேறு நிதி நிறுவனங்கள் அல்லது மற்ற வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து பெறலாமா என்று இருக்கிறோம். அப்படிப் பெற்று இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணை. மைய அரசில் இருக்கிற திட்டக் கமிஷன் துணைத் தலைவர் மற்றும் நிதிக்கமிஷன் அதிகாரிகளைக் கூட அழைத்து வந்து, அவர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள். அவர்களிடமும் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆக எப்படியும் இதற்கொரு நிரந்தரத் தீர்வு காணவேண்டும், எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினை மக்களுக்கு இருக்கக்கூடாது என்பதுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆணை. அதை எதிர்காலத்திலே தீர்ப்பதற்கான வழிமுறைகளை இந்த அரசு கையாளும். நிச்சயமாக, புனேயிலிருந்து பெறும் அந்தத் தொழில் நுட்ப ஆய்வின் அடிப்படையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதில் இந்த அரசு முனைப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நிரந்தரமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதைப் போல, ஒரு நிரந்தரமான நடவடிக்கையை எடுக்கவில்லை என்றால், நிரந்தரமான தீர்வு காணப்படவில்லை என்றால் பல சிரமங்கள் ஏற்படும். இப்போது அங்கேயுள்ள எல்லாத் தொழிற்சாலைகளின் மதில்களும் சுவர்களும் இடிந்து தண்ணீரில் விழக்கூடிய சூழ்நிலை வந்துவிட்டது. இதற்கு மேலும் சாலையை எக்ஸ்டென்ட் செய்து அந்த எண்ணூர் விரைவு

பேருந்து சாலையைப் போடுகிற சூழ்நிலை இல்லை. ஆகவே, புனே ஆராய்ச்சிக் குழு கொடுத்திருக்கிற அறிக்கையைப் பெற்று, நிதியொதுக்கீடு உடனடியாக கொடுத்து, எவ்வளவு தொகை என்று பார்க்காமல், எவ்வளவு கோடி என்று பார்க்காமல், செய்யவேண்டும். திருவொற்றியூர் பகுதியில் இருக்கிற *5* லட்சம் மக்கள் இன்றைக்கு அச்சத்திற்குள்ளாகி இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல அந்த பகுதியில் இருக்கிற அனைத்து மக்களும் என்று சொல்லமுடியாது. ஒரு பகுதியில் இருக்கிற மக்கள். அவர்கள் குறைந்த அளவில் இருக்கிறார்களா அல்லது அதிக அளவில் இருக்கிறார்களா என்ற பிரச்சினை இல்லை. அவர்கள் *5* லட்சம் பேர் என்றாலும் அல்லது *5* பேராக இருந்தாலும் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றாகத் தான் எண்ணி நடவடிக்கை எடுக்க முடியும். மக்களுக்கு பாதிப்பு என்ற வகையில் அதை பார்க்க முடியும் என்ற அடிப்படையில்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட நீங்கள் பார்த்திருப்பீர்கள். வேலைகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிரேன்களை வைத்து வேலை செய்கிற படங்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. கடலரிப்பைத் தடுப்பதற்காக முனைப்பாக நம்முடைய பொதுப்பணித் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகிறபோது பல்வேறு சங்கடங்களை இந்த அரசு எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இது ஒரு மிகப்பெரிய பிரச்சினை. அவர்கள் தெரிவித்ததைப் போன்று உடனடியாக தீர்க்க முடியாத பிரச்சினையாக இருப்பதால்தான் இப்போது சில நடவடிக்கைகள் மூலம் இதைத் தடுத்துக் கொண்டிருக்கிறோம். இதை நிரந்தரமாக தீர்க்கவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு கருத்து மாறுபாடு கிடையாது. பல கோடிக்கணக்கான ரூபாயில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஆகவே இதற்கு ஆய்வு செய்து முறையாக டெக்னிக்கல் அட்வைஸ் வேண்டியிருக்கிறது. ஏதாவது ஒரு முறையில் நாம் செய்கிறபோது மறுபடியும் அலை அடிக்கிறபோது அது பாதிக்கப்பட்டு விட்டால் செய்த திட்டம் பெயிலியூர் ஆகிவிட்டது என்று குற்றச்சாட்டு வரும். ஆகவே அதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குத் தான் தொழில்